# SHANMUGAM IAS ACADEMY

JOIN

JOIN

## TNPSC நடப்பு நிகழ்வுகள் ஜூன் 13 ,2019

WEBSITE: www.iasipstnpsc.in TELEGRAM: www.t.me/shanmugamiasacademy

# இந்தியா

❖ பல்வேறு முக்கிய மசோதாக்களுக்கு மத்திய மந்திரி சபை ஒப்புதல் அளித்துள்ளது




- முத்தலாக் தடை மசோதாவுக்கு மத்திய மந்திரி சபை ஒப்புதல் அளித்துள்ளது
- காஷ்மீர் இடஒதுக்கீடு (திருத்தம்) மசோதாவுக்கு மந்திரிசபை ஒப்புதல் அளித்துள்ளது
- அரசு இல்லங்கள் மற்றும் அரசு அலுவலக வளாகங்களில் அங்கீகாரம் இன்றி தங்கி இருப்போரை வெளியேற்ற வகை செய்யும் பொது வளாகங்கள் திருத்த மசோதாவுக்கு மந்திரி சபை ஒப்புதல் அளித்துள்ளது
- ஓமியோபதி மத்திய கவுன்சில் (திருத்தம்) மசோதா, பல் மருத்துவர்கள் மசோதா ஆகியவற்றுக்கும் மந்திரி சபை ஒப்புதல் அளித்தது. மேலும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புக்குழுவின் பதவிக்காலத்தை 2 மாதம் நீட்டிப்பதற்கும் மந்திரிசபை ஒப்புதல் அளித்துள்ளது

முத்தலாக் தடை

- முத்தலாக் முறை மூலம் முஸ்லிம் பெண்களுக்கு விவாகரத்து வழங்குவதை தடை செய்யும் வகையில் முந்தைய பா.ஜனதா ஆட்சியில் 2 முறை அவசர சட்டம் கொண்டு வரப்பட்டன.
- உடனடி முத்தலாக்" அல்லது "தலாக்–அல்–பித்தத்" என்பது மூன்று முறை தங்கள் மனைவியிடம் 'தலாக்' என்று ஒரே நேரத்தில் சொல்லி ஆண்கள் விவாகரத்து செய்ய வழிவகை செய்யும் இஸ்லாமிய வழக்கமாகும்.

❖ உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அதிவேக ஆளில்லா விமானம் சோதனை செய்யப்பட்டுள்ளது



- ஒடிசா மாநிலம் அப்துல் கலாம் தீவில் உள்ள ஒருங்கிணைந்த சோதனைத்தளத்தில் பரிசோதிக்கப்பட்டுள்ளது
- மமுதன் முதலாக தற்போது தான் பரிசோதிக்கப்பட்டுள்ளது
- 20 நொடிகளில் 32.5 கிலோ மீட்டர் தூரம் பறக்கும் திறன் கொண்டது
- இதில் அதிநவீன ஸ்ட்ராம் ஜெட் இன்ஜின் பொருத்தப்பட்டுள்ளது .

- தாஜ்மஹாலில் 3 மணி நேரத்திற்கு மேல் இருந்தால் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படும் என கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது



- முன்பு சுற்றிப்பார்க்க ஒரு நாள் முழுவதும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது
- இதற்காக புதிய டோக்கன் முறையை இந்திய தொல்லியல் துறை அறிமுகப்படுத்தியுள்ளது
- மெட்ரோ ரயில் உள்ள டோக்கன் முறை தற்போது இங்கு அமல் படுத்தப்படுகிறது
- கிழக்கு மேற்கு நுழைவாயில் பகுதியில் 7 டோக்கன் தானியங்கி வசதி கதவுகளும் வெளியேறுவதற்கு 5 தானியங்கி கதவுகளும் அமைக்கப்பட்டுள்ளன
- உள்நாட்டு சுற்றுலா பயணிகளுக்கு 200 ரூபாயும் சார்க் மற்றும் பிம்ஸ் டேக் நாடுகளை சேர்ந்தவர்களுக்கு 450 ரூபாயும் ,வெளிநாட்டு பயணிகளுக்கு 1100 ரூபாயும் வசூலிக்கப்படுகிறது
- தாஜ் மகால் (Taj Mahal, தாஜ் மஹால்), இந்தியாவிலுள்ள நினைவுச்சின்னங்களுள், உலக அதிசயங்களில் ஒன்றாகும். இது ஆக்ராவில் அமைந்துள்ளது. முழுவதும் பளிங்குக் கற்களாலான இக்கட்டிடம், ஆக்ரா நகரில் யமுனை ஆற்றின் கரையில் கட்டப்பட்டுள்ளது. இது காதலின் சின்னமாக உலகப் புகழ் பெற்றது
- இக் கட்டிடம் முகலாய மன்னனான ஷாஜகானால், இறந்து போன அவனது இளம் மனைவி மும்தாஜ் நினைவாக 22,000 பணியாட்களைக் கொண்டு 1631 முதல் 1654ஆம் ஆண்டுக்கு இடையில் கட்டிமுடிக்கப்பட்டது.

## உலகம்

- உலகின் அமைதியான நாடுகளின் பட்டியலில் இந்தியா 141 வது இடம் பிடித்துள்ளது
  - 163 நாடுகளில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது .
  - முதல் இடத்தில் ஐரோப்பிய நாடான ஐஸ்லாந்து கடைசி இடத்தில் அயர்லாந்து உள்ளது .
  - ஆஸ்திரேலியாவை சேர்ந்த பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான நிறுவனம் இவ்வாய்வை மேற்கொண்டது .

- 2018 ல் 139 வைத்து இடத்தில் இருந்தது இந்தியா தற்போது 5 இடங்கள் பின்தங்கி உள்ளது .



கடைசி 5 நாடுகள் பட்டியலில்

- சிரியா ,ஆப்கானிஸ்தான் ,ஏமன், ராக், தெற்கு சூடான் .
- பூடான் 15 வது இடத்தில் உள்ளது .
- இலங்கை 72 வது இடத்தில் உள்ளது
- நேபாளம் 76 வது இடத்தில் உள்ளது
- வங்கதேசம் 101 வது இடத்தில் உள்ளது
- பாகிஸ்தான் 153வது இடத்தில் உள்ளது

- கஜகஸ்தான் புதிய அதிபராக ஜமாட் டோகயேவ் பொறுப்பேற்றுள்ளார்



- 30 ஆண்டுகளாகி இப்பதவியில் இருக்கும் நூர் சுல்தான் இம்முறை தேர்தலில் பங்கெடுக்கவில்லை
- இடைக்கால அதிபராக இருந்து தற்போது தேர்தலில் வென்று அதிபராகியுள்ளர்
- நடு ஆசியாவிலுள்ள ஒரு கண்டம் கடந்த தொடர்ச்சியான நாடாகும். இதன் ஒரு சிறுபகுதி கிழக்கு ஐரோப்பாவில் யூரல் ஆற்றுக்கு மேற்கே அமைந்துள்ளது.
- உலகின் மிகப்பெரிய நிலம்சூழ் நாடாகவும் உலகின் ஒன்பதாவது பெரிய நாடாகவும் உள்ளது. 2,727,300 சதுர கிலோமீட்டர்கள் (1,053,000 sq mi) பரப்பளவு கொண்ட இதன் பகுதி மேற்கு ஐரோப்பாவிலும் பெரியதாகும்.

## விளையாட்டு

- <u>ஆசிய ஜிம்னாஸ்டிக்போட்டியில் பங்கேற்கும் இந்திய அணி வீரர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்</u>



- மங்கோலியாவில் வருகின்ற 19 ம் தேதி இப்போட்டி நடைபெற உள்ளது.
- 4 வீரர்கள் 4 வீராங்கனைகள் அடங்கிய அணி தேர்வு செய்யப்பட்டுள்ளது
- <u>ஆடவர் பிரிவில்</u>
- <u>ராகேஷ் குமார் பத்ரா</u>
- <u>யோகேஸ்வர் சிங்</u>
- <u>டேபாங்டே</u>
- <u>அரிக்ட்டோ</u>

<u>மகளிர் பிரிவில்</u>

- <u>பிரனதி நாயக்</u>
- <u>ஸ்ரத்தா தலேகர்</u>
- <u>பிரனதி தாஸ்</u>
- <u>பாப்பையா தாஸ்</u>

❖ உலக பளு தூக்கும் சாம்பியன்ஷிப் போட்டி யில், அமெரிக்காவை சேர்ந்த தமிழ்ப் பெண் ஆர்த்தி நிதி வெள்ளிப் பதக்கம் வென்று சாதனைப் படைத்துள்ளார்.




- ஸ்வீடனில் இப்போட்டியானது நடைபெற்றது
- 20–22 வயதுக்குட்பட்ட, 63 கிலோ எடையுள்ள பெண்களுக்கான பிரிவில் அமெரிக்கா சார்பில் போட்டியிட்டு ஆர்த்தி நிதி வெள்ளி வென்றுள்ளார்
- இவர்களது பூர்வீகம் கரூர் மாவட்டத்தை சேர்ந்தது

## விருதுகள்

❖ <u>எழுத்தாளர் அமிதாவ் கோஷுவ் க்கு ஞான பீட விருது வழங்கப்பட்டுள்ளது</u>



- <u>2018 ம் ஆண்டிற்கு தற்போது வழங்கப்பட்டுள்ளது</u>
- <u>இவர் ஆங்கில எழுத்தாளர்</u>
- ஞான பீட விருது பெரும் முதல் எழுத்தாளர் இவராவார் .
- இவருக்கு மேற்கு வாங்க முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி வழங்கினார்
- ஞானபீடவிருது (JnanpithAward )என்பது இந்தியாவில்இலக்கியத்துக்காக வழங் கப்படும் ஒரு உயரிய விருது ஆகும்.
- இந்த விருதை வழங்குபவர்கள் பாரதிய ஞானபீடம் என்ற பண்பாட்டு இலக்கியக் கழகமாகும்.
- இவ்வறக்கட்டளை தி டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழை வெளியிடும் சாகு சைனக் குடும்பத்தினரால் நிறுவப்பட்டது.
- ஒவ்வோர் ஆண்டும் இந்தியாவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட 15 மொழிகளுள் சிறந்த எழுத்தாளருக்கு வழங்கப்படுகிறது.
- 1954 –ல் இதைத் தோற்றுவித்தவர் சாந்திபிரசாத் ஜெயின் என்பவர்.